**சொறனாதொட்ட பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூலை 20 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 24 திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து சொறனாதொட்ட பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 கணக்காய்வுக்கென சாட்சிகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 643,469,478 பெறுமதியான காணி மற்றும் கட்டட நிலுவைக்கான உறுதிப்பத்திரம், திட்டம், மாற்றல் கட்டளைகள் மற்றும் இணைப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்த தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | உள்ளுராட்சி ஆணையாளரின் அறிவுறுத்தல் கடிதத்தின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் உள்ளடக்கிய சபை நியமித்து அனுப்பப்பட்டுள்ளது. |

### 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| | (i) நிதி ஒழுங்கு விதி 104(1) மற்றும் 104(3) | சபைக்கு சொந்தமான உழவு இயந்திரத்தின் ஒரு மின்கலன் மற்றும் கப் வாகனத்தின் | நிதிப் பிரமானங்களின்படி நடவடிக்கை | உள்ளுராட்சி ஆணையாளருக்கு தகவல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கழற்றிய இயந்திரம் மற்றும் அதனுடன் சம்மந்தமான பிரிதொரு உபகரணம் காணாமல் போயுள்ள போதிலும் அது காணாமல் போனமை தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | தெரிவித்துள்ளேன். |
| (ஆ) | மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 இலக்க சுற்றுநிருபம் | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் 05 வருடத்திற்கு ஒரு தடவை விலைமதிப்பீடு செய்ய வேண்டியிருந்தபோது 23 கடைகள் சம்மந்தமாக விலைமதிப்பீட்டு அறிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றுநிருப அறிவுறுத்தல்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விலைமதிப்பீட்டு திணைக்கள விலை மதிப்பீட்டு அறிக்கை எடுக்க அறிவித்துள்ளோம். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 796,747 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 1,022,489 தொகையாக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிதிநிலமைக் கூற்றில் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிதிநிலமைக் கூற்றில் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,121,374 | 2,142,085 | 1,655,641 | 486,443 | 1,696,724 | 1,999,931 | 1,578,052 | 421,879 |
| (ii) | வாடகைகள் | 537,800 | 562,108 | 454,173 | 107,935 | 388,800 | 421,418 | 396,697 | 24,722 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 4,849,525 | 4,847,738 | 376 | 4,847,361 | 3,529,851 | 4,221,403 | 689,814 | 3,531,589 |
| (iv) | ஏனைய வருமானம் | - | - | - | - | - | - | - | - |
| | மொத்தம் | 7,508,699 | 7,551,931 | 2,110,190 | 5,441,739 | 5,615,375 | 6,642,752 | 2,664,563 | 3,978,190 |

2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| 05 வருடத்திற்கு மேலாக காணப்பட்ட நிலுவை வருமானம் ரூபா 10,624,477 மீளாய்வாண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும் | 2020 ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு ரூபா 3,028,439 அறவிடப்பட்டுள்ளன. |

2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 2,000,000 பெறுமதியான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 2,844,525 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | 2020 ஏப்ரல் 30 ஆந் திகதிக்கு நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 756,374 மற்றும் முத்திரைத் தீர்வைக் கட்டணம் ரூபா 1,958,674 அறவிடப்பட்டுள்ளது. |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள், பொது வழிகள், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவை பெற்றிருப்பினும் சபையுடன் தொடர்புபடுத்தி இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கு என்பவற்றை அளவிட்டுக்கொள்ளும் குறிகாட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கத்தை அளவீடு செய்யும் குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க வருடாந்த இலக்குகளை அடைவது தொடர்பான விருத்தி மட்டத்தை அளவிட வேண்டும் | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு சம்மந்தமாக இனங்கான வேண்டிய அளவீடு செய்யும் குறிகாட்டிகள் 04 வருட திட்டத்தில் உள்ளடக்கியிருக்கின்றேன். |

**3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 14 நீர்த் திட்டம் சம்மந்தமாக வருமானத்திலும் கூடிய செலவு ரூபா 1,698,800 ஆக காணப்பட்டுள்ளன. | செலவினத்தை குறைத்து சேவை வழங்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலத்தில் ஒரு அலகிற்கு அறவிடும் தொகையை சிறு வீதத்தில் அதிகரித்து நட்டத்தை குறைக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | உள்நாட்டு கடன்கள், அபிவிருத்தி நிதியத்திற்கு 2018, 2019 வருடத்துடன் தொடர்பான நிலுவை கடன் தவணைகள் ரூபா 981,672 தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | தவணைக் கட்டணம் உரிய காலத்தில் தீர்க்கப்பட வேண்டும். | அந்த தவணைக் கட்டணம் கொடுப்பனவு செய்ய முடியாமையால் அவ் கடன் தொகை பதிவளிப்பு செய்வதற்கு அனுமதிபெற தகவல் வழங்கியுள்ளோம். |
| (இ) | 05 வருடத்திற்கு மேலான காலத்தில் இருந்து காணப்பட்ட செலுத்த வேண்டிய செலவின கடன்கொடுநர் ரூபா 16,132,397 மீளாய்வாண்டிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கடன் மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். | தற்போது ஒரு பகுதி தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 05 பதவிகள் தொடர்பாக 13 ஆளணியினர் அதிகமாகவும் 06 பதவிகள் தொடர்பாக 7 ஆளணியினர் குறைவாகவும் காணப்படுகின்றது. | மேலதிகமாக காணப்படும் பதவிகளை தீர்வு செய்யவும் மற்றும் வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும். | மேலதிக பதவிகளுக்கான அனுமதிக்காக அனுப்பியுள்ளோம். வெற்றிடம் நிரப்பப்பட நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கின்றோம். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கணக்காய்வு முகாமைத்துவ குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் 2 மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. | குறைந்தது ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒன்றுப்படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | எதிர்வரும் காலத்தில் தாமதிக்காது உரிய காலத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்கின்றேன். |

**4.2 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கு உள்ளக கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு செய்யப்பட வேண்டும். | உரிய காலத்தில் செய்ய முடியாமல் போய்விட்டது. |